# பாலர் கல்வி

தொகுதி 6 | 1941 ௵ ஜூலை ௴ விஷு ௵ ஆடி ௴ | பகுதி 4

## Heredity—வம்ச பாரம்பரியம்

ஸ்ரீ. எம். எஸ். ஸ்ரீநிவாஸ சர்மா, எம். ஏ,

### மனித வேற்றுமைகள்

ஜனநாயகக் கொள்கைகளும், மனித ஸமத்துவ உபதேசங்களும், தற்காலத்தில் மும்முரமாகப் பரவி வருகின்றன. "பிறக்கும்போது எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வின்றி சமநிலையில் இருக்கிறார்கள்; தக்க கல்வியும், ஏற்ற சந்தர்ப்பங்களும் வாய்ப்பின் எல்லா மாந்தர்களும் யாதொரு வித்தியாசமுமின்றி ஒரே மாதிரி வளர்வார்கள்" என்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் பள்ளிக்கூடங்களில் ஒரே திட்டப்படி ஒரே உபாத்தியாயரிடம் கல்வி பயிலும் பிள்ளைகள், ஒரே மாதிரியான அறிவு வளர்ச்சியை அடைகிறார்களா? இல்லையே, ஏன்? மனித வேற்றுமை உலகசிருஷ்டியின் எண்ணற்ற அற்புதங்களுள் ஒன்று. புத்தி நுட்பம், செய்கைத்திறமை முதலிய கல்வி அம்சங்களில் மாத்திரமல்ல; உணர்ச்சி, வாஞ்சை, கலைப்பிரியம், ஸமூகக்கூட்டுறவு, சமயப்பற்று, முதலிய மனோநிலைகளிலுங்கூட மனிதர்களுக்குள் மகத்தான வித்தியாசங்கள் இருக்கின்றன. "உலக ஆதிக்கம் பெறவேண்டும்; சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கவேண்டும், குடியேற்ற நாடுகளை நிறுவவேண்டும்" —என்று துடிக்கும் ஐரோப்பியனும் மனிதன் தான். "உலகவாழ்க்கை அநித்தியம்; செல்வமும், உடலும், யாவும் நிலையற்றன; ஆகவே, அழிவற்ற சாசுவத இன்பநிலையை யளிக்கும் ஆன்ம லாபத்தை அடைவதே ஜீவலக்ஷியம்"—என்று கருதும் இந்தியனும் மனிதன் தான். ஆனால் இம்மனிதர்களின் மனப்பான்மை மாறுபட்டிருப்பானேன்?

திருச்சி அகில இந்திய ரேடியோவில் 6—5—1941-ல் செய்த பிரசங்கம். இங்கு அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது

இந்தப் பெரிய பிரசினையை ஆராய்வதற்குமுன் நம் கண்முன் நிற்கும் ஸ்வாரஸ்யான சில விஷயங்களைக் கவனிப்போம். புத்தி சாதுர்யத்திலும், புருஷப்பிரபாவத்திலும், கலைவன்மையிலும் தேகவனப்பிலும் உணர்ச்சிப் பெருக்கிலும் ஒரே ஊரில் வாழும் ஒரு குடும்பத்தினருக்கும் மற்றொரு குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த பேதங்களிருக்கின்றன. அவ்வளவு தூரம் போவானேன்? ஒரே தாய் தந்தையருக்குப் பிறந்த குழந்தைகளுக்குள் என்னென்ன மாறுபாடுகள் தோன்றுகின்றன. அண்ணன் பரோபகாரி; தம்பி சுயநல சிகாமணி; அண்ணன் நெட்டையன், தம்பி குட்டையன்; தமயன் சங்கீதப்பிரியன்; தம்பிக்குப் பாட்டென்றால் தலைவலி. அண்ணன் தெய்வபக்தி உள்ளவன், சத்குண சம்பன்னன்; தம்பியோ—"கோவிலாவது, கடவுளாவது—யாவும் மோசம். இவைகள் மனிதனை அடிமைகளாக்கும் விலங்குகள்"—என்று குதர்க்கம் செய்யும் நாஸ்திகன். ஜீவ சாஸ்திரமும், மனோதத்துவ சாஸ்திரமும், மனித வித்தியாசங்களைப் பரிசீலனை செய்து, சில முடிவுகளுக்கு வந்துள்ளன. மனித முற்போக்கிற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் பாடுபடும் வித்தியாதிகாரிகளும், ராஜீய, பொருளாதாரத் தலைவர்களும், இந்த அடிப்படையான உண்மைகளையறிந்து அவைகளை அஸ்திவாரமாகக் கொண்டு, ஜன நிர்மாணம் செய்யவேண்டும்.

## மூல காரணங்கள்

வம்ச பாரம்பரியமும் சுற்றுப்புற சௌகரியங்களுமே மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள பேதங்களுக்கு மூலகாரணங்கள். தோட்டக்காரனைக்கவனிப்போம். நந்தவனம் வனப்புடன் செழித்து வளர்வதற்கு அவன் என்ன செய்கிறான்? நல்ல விதைகளைப் பொறுக்கியெடுப்பதுடன், நிலத்தையும் பண்படுத்தி, எருவிட்டுக் களைபிடுங்கி, காலாகாலத்தில் நீர்ப் பாய்ச்சி, செடி கொடிகளைப் பராமரிக்கிறானல்லவா? அதைப்போலவே, மனித வளர்ச்சிக்கும் பரம்பரையும், சுற்றுப்புற சாதனங்களும் அவசியமானவை. இவ்விரண்டினுள் எது மேன்மை பெற்றது? எது இன்றியமையாதது?—என்று கேட்பது பொருந்தாது. நீள் சதுர நிலத்தின் பரப்பு அதன் நீளம், அகலம் ஆகிய இரண்டையும் பொருத்திருக்கிறதல்லவா? பரம்பரையின் சக்திகள் சுற்றுப்புற வன்மைகளின் தூண்டுதல்களினால் வெளிப்பட்டுத் தான், மனிதனுடைய பிரத்தியேக குண விசேஷங்களாக விருத்தியடைகின்றன. இந்த ரகஸ்யத்தை நிரூபிக்க இரண்டுவித பரீக்ஷைகள் நடத்தப்படுகின்றன, ஒன்று பரம்பரையின் முக்கியத்துவத்தை நிலைநாட்டவும், மற்றொன்று சூழ்நிலைப் பெருமையை ஸ்தாபிக்கவும் கையாளப்படுகின்றன. வெவ்வேறான பரம்பரையையுடைய இரண்டு நபர்களை எடுத்து ஒரே விதமான அந்தஸ்தில் வைத்து, சமமான முறையில் வளர்த்து வந்தால் அவர்களுடைய குணத்திலும் நடத்தையிலும் வித்தியாசங்கள் காணப்

படின், அவர்கள் பரம்பரையின் விசேஷமென்றுதானே ஊகிக்கவேண்டும்? ஒரே பரம்பரையில் உதித்த இரண்டு நபர்களை யெடுத்து வித்தியாசப்பட்ட சுற்றுப்புறங்களில், மாறுபட்ட நிலையிலிருத்தி வளர்த்தால், அவர்களுக்குள் தோன்றும் பேதங்கள் சுற்றுப்புற வன்மையின் காரியங்கள் என்று சொல்லலாமல்லவா ?

## பரம்பரை தத்துவம்

ஒரு இனத்தைச்சேர்ந்த ஆணும் மற்றொரு இனத்தைச்சேர்ந்த பெண்ணும் கலந்தால் மிசிர ஸந்தானம் தான் உற்பத்தியாகும்: ஆண் கழுதைக்கும் பெட்டைக் குதிரைக்கும் பிறப்பது கோவேறு கழுதையேயொழிய குதிரையன்று. குதிரையின் கருப்பையில் உதித்து அங்கேயே வாழ்க்கையை ஆரம்பித்துங்கூட, இந்தப் புதிய ஜீவன் வளர வளர கழுதைரூபமாகவே வளர்கிறதே! இதன் காரணமென்ன? சினைப்பட்ட ஒவ்வொரு உயிரணுவும் (**Fertilised ovum**) 24 ஜதை "குரோமோஸோம்கள்" (**Chromosomes**) எனப்படும் அணுக்கோல்களுடன் உற்பத்தியாகின்றன. ஆண் பெண் கலவிப்பெருக்கத்தில் (**Sexual Reproduction**) கருவுறல் (**Fertilisation**) சம்பவிக்கும் காலத்தில் தகப்பனுடைய "விந்து" (**sperm**) விலிருந்து 24 அணுக்கோல்களும் தாயினுடைய முட்டையிலிருந்து (**ovum**) 24 அணுக்கோல்களும் கிளம்பி ஜதை ஜதையாக இணைக்கப்பட்டு ஒன்று சேருகின்றன. இந்த 24 ஜதை அணுக்கோல்கள் தாம், பாரம்பரிய வன்மைகளைத்தாங்கி, குழந்தையின் வளர்ச்சிக்கும் குணஞ்செயல்களுக்கும் ஊற்றுக விருக்கின்றன. சகோதரர்களுக்குள்ளும், இரட்டைப்பிள்ளைகளுக்குள்ளும் காணப்படும்—உடல் நிறம், தேகக்கூறு, மனநிலை, குணவிசேஷங்கள்—ஆகிய இவை சம்பந்தப்பட்ட வித்தியாசங்களுக்குக் காரணம், அணுக்கோல்களின் வித விதமான ஜோடிகளாகும். சாதாரணமாக தாயினுடைய அண்ட கோசத்தின் இரண்டு முட்டைகள், தந்தையின் இரண்டு உயிர்த்தாதுக்களால் சினைப்பட்டு, கருப்பையில் வளர்ந்தால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. சில ஸமயங்களில் சினைப்பட்ட ஒரே உயிரணுவிலிருந்து இரண்டு ஜீவன்கள் பரிணமிப்பதுண்டு. இவர்களை "அனன்னிய இரட்டையர்கள்" (**Identical twins**) என்று சொல்லவேண்டும். இவர்கள் அறிவு, நிறம், தேக அமைப்பு, இனம், பால், மனோபாவங்கள் முதலிய எல்லா அம்சங்களிலும் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருப்பார்கள். மனநூல் நிபுணர்கள் இரட்டைக் குழந்தைகளின் பரம்பரை வன்மையைப்பற்றி அதிக நுட்பமான பரிசோதனைகள் செய்துள்ளார்கள். உயரம், பருமன், புத்தி கூர்மை—ஆகிய இந்த அம்சங்களில், சாதாரண இரட்டைக் குழந்தைகளுக்குள் 50 சதம் முதல் 60 சதம் வரை ஒற்றுமையும், அனன்னிய இரட்டைக் குழந்தைகளுக்குள் 93 சதம் முதல் 96 சதம் வரை ஒற்றுமையும் இருப்பதாக தீர்மானித்துள்ளார்கள். அமெரிக்காவில் அனன்னிய

இரட்டைப்பெண் குழந்தைகளை ஐந்தாவது மாதத்திலிருந்து ஒன்றைக் கிராமத்திலும், மற்றொன்றை நகரத்திலும் வளர்த்தார்கள். பட்டண வாசப்பெண் உயர்க்கல்வி பயின்று, சங்கீதத்தில் பாண்டித்தியம் பெற்றாள். கிராமவாசப்பெண் பயிர்த்தொழிலில் பயிர்ச்சிபெற்று, பெரிய பண்ணையை நிர்வாகம்செய்து வந்தாள். 25 வயதுவரை இருவரும் மணம் புரியவில்லை. நகரவாசப்பெண் ஒரு அங்குலம் அதிக உயரமாகவும், 28 ராத்தல் எடை அதிக கனமாகவும், ஆரோக்கிய திடகாத்திரத்தில் சிறந்தவளாகவும் காணப்பட்டாள். ஆனால் அறிவுத்தொகையில் இருவரும் ஏறக்குறைய சமானர்களா யிருந்தார்கள்.

## "அறிவுத் தொகை"

"அறிவுத் தொகை" (Intelligence Quotient) என்பது பிறவிச் சாமர்த்தியம்; உடன் பிறந்த புத்திசாலித்தனம். இது பரம்பரையைப் பொருத்திருக்கிறது. இது மாறுவதில்லை குழந்தை முதல் வயோதிகம் வரையில் ஒவ்வொருவனுடைய அறிவுத் தொகை ஒரே நிலையில்தானிருக்கும். கல்வி முறையையும், பயிற்சித் திட்டத்தையும், சுற்றுப்புற சௌகர்யங்களையும் எவ்வளவுதான் விருத்தி செய்தாலும் ("I Q"—எனப்படும்) அறிவுத் தொகையை உயர்த்த முடிகிறதில்லை. சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்? அப்படியானால் கல்வி ஸ்தாபனங்களாலும், பிரத்தியேகப் பயிற்சியினாலும் பிரயோஜனமில்லையா? என்று கேட்கவேண்டாம். வித்தில் சத்தில்லாவிட்டால், பூமியின் செழிப்பும், எருவின் வீர்யமும் பராமரிப்பின் அக்கரையும் என்ன செய்ய முடியும்? பெற்றோர்களை இழந்து அனாதாலயங்களில் வளரும் குழந்தைகளும், உயர்ந்த அந்தஸ்தில் காப்பாற்றப்படும் வளர்ப்புக் குழந்தைகளும், (Orphans and foster Children) புத்தி கூர்மையின் வித்தியாசங்களுக்குப் பரம்பரையே காரணம் என்பதை நிரூபிக்கின்றன. அமெரிக்காவில், கல்யாணமாகாத தாய்கள் தம் குழந்தைகளை அவமானத்தினால் தாமே வளர்க்கமுடியாத நிலையிலிருப்பதால், சிசு விநியோக விடுதிகளுக்கு (Child - placing Agencies) ப் பிறந்தவுடனேயே கொண்டுவந்து விட்டுவிடுகிறார்கள். இக் குழந்தைகளை மலட்டு ஸதிரீகளும், குழந்தைகள் இல்லாத தனவான்களும், அறிவாளிகளும், விலைக்கு வாங்கி, ஸ்வீகாரம் செய்துகொண்டு, மேன்மையாக, உன்னத அந்தஸ்தில் வைத்து வளர்க்கிறார்கள். காலிபோர்னியாவிலும், சிகாகோவிலும் இந்த வளர்ப்புக் குழந்தைகளின் போக்கையும், அறிவு விருத்தியையும் பற்றி ஆராய்ச்சிகள் நடந்தன. முன்னேற்றத்திற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் சம்பிரமமாயிருந்தும், வளர்ப்புத் தந்தைகளின் அறிவுத் தொகையை இவர்கள் எட்டிப்பார்க்கக்கூட முடியவில்லை. வளர்ப்புக் குழந்தைகளின் அறிவுத்தொகை 90, 95 தான். ஆனால் வளர்ப்புப் பிதாக்களின் அறிவுத்தொகையோ 125, 130.

எனவே பரம்பரையின் உத்வேகமில்லாவிட்டால், சுற்றுப்புற வன்மையும், கல்வியின் சக்தியும் தமது பூரண அதிகாரத்தைச் செலுத்த முடிகிறதில்லை என்று புலப்படுகிறது.

## குல வித்தியாசங்கள்

அமெரிக்காவில் வசிக்கும் பலவித ஜாதிக் குழந்தைகளின் அறிவுத் தொகை பேதங்கள் பின் வருமாறு:—யூதக் குழந்தைகளின் சராசரி (I. Q.) அறிவுத்தொகை 106; ஸ்வீடன் குழந்தைகள் 105; ஜப்பான் 101; இங்லிஷ் 99; போர்த்துகீஸ் 83 ;நீக்ரோ 73. இதுமாத்திரமல்ல. குழந்தைகளின்புத்திகூர்மை பிதாக்களின் உத்தியோகத்தையும் சார்ந்திருக்கிறது. டாக்டர்கள், ஜட்ஜுகள், வக்கீல்கள், இஞ்சினீர்கள். இவர்கள் குழந்தைகளின் அறிவுத் தொகை சராசரி 116: குமாஸ்தாக்கள், வியாபாரிகள் முதலியோரின் குழந்தைகள் 108. சமயற்காரர்கள், விவசாயிகள், மோட்டார் ஓட்டிகள் முதலியோரின் குழந்தைகள் 104, கூலியாட்கள், தொழிலாளிகள் ஆகிய இவர்களின் குழந்தைகள் 96.

## ஸ்திரி புருஷ பேதங்கள்

ஆணாகவோ, பெண்ணாகவோ பிறப்பது பரம்பரை மர்மத்தைச் சார்ந்தது. பிறப்பதற்கு 9 மாதத்திற்கு முன் உண்டான கருவின் ஜீவசத்தில் உள்ள 48-அணுக்கோல்களுள் ஒன்று, ஆளின் லிங்கத்தை (Sex) அதாவது ஆணு, பெண்ணு என்பதை ஸ்தாபிக்கிறது. இதிலிருந்து தான் ஸ்திரீ புருஷர்களுக்குள்ள அங்கவமைப்பு, உடல் வளர்ச்சி, மனவெழுச்சி, தேகபலம், ஸகிப்புத் தன்மை, மனோலக்ஷியங்கள் முதலிய அடிப்படையான பேதங்கள் உற்பத்தியாகின்றன.

## குடும்ப மஹிமை

நாம் ஒவ்வொருவரும் நம் மாதாபிதாக்களுடைய பரம்ரையின் குண விசேஷங்களைப் பிறப்புரிமையாகப் பெற்றுப் பிறந்திருக்கிறோம். கணவனும் மனைவியும் நல்லவம்சத்தவர்களாயும் மேதாவிகளாயுமிருந்தால் அவர்களின் வழியாக வரும் சந்ததிகளும், உன்னதபதவி அடைந்து சிறப்புற்று விளங்குவார்கள். இதற்கு நிதர்சனமாக "ஜானதன் எட்வர்ட்ஸ்" (Jonathan Edwards) என்பவரின் வமிசாவளியைக் கவனிக்கலாம். மஹா அறிவாளியான இவர், பல நூல்களை இயற்றிப் புகழடைந்த ஒரு ஸ்திரீயை மணந்தார். அந்த வமிசத்தில் 1394 பேர் தோன்றினர். அவர்களுள் 13 பேர் காலேஜ் ப்ரின்ஸிபால்கள்; 295 பேர் யூனிவர்சிடி பட்டதாரிகள்; 65 பேர் சர்வகலாசாலை ஆசிரியர்கள்; 60 பேர் டாக்டர்கள்; 100 பேர் கிறிஸ்துமத குருக்கள்; 75 பேர் ராணுவ உத்தியோகஸ்தர்கள்; 60 பேர் பிரபல நூலாசிரியர்கள்; 100 பேர் வக்கீல்கள்; 80 பேர் சர்க்கார் அதிகாரிகள்; 30 பேர்

ஜட்ஜுகள்; 5 பேர் "ஸெனட்" சட்டசபை மெம்பர்கள்; ஒருவர் அமெரிக்காவின் உபதலைவர்.

## மந்த புத்தி

புத்திசாலித்தனத்தைப் போலவே மந்த புத்தியும் பரம்பரையைச் சேர்ந்தது. ஆணும் பெண்ணும் சமமான அறிவுத்தொகை யுடையவர்களாயிருந்தால்தான் அவர்கள் குழந்தைகளும் புத்திசாலிகளாக இருப்பார்கள். தகப்பன் நல்ல அறிவாளியாயும், தாய் முழுமூடமாயு மிருந்தால், அவர்கள் குழந்தைகள் மந்தர்களாகத்தானிருப்பார்கள். இந்த விஷயத்தில் ஜனத் தலைவர்களும் அரசாங்கத்தாரும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் மந்தபுத்தி, துர்நடத்தைக்குக் காரணம். குற்றவாளிகளிற் பெரும்பான்மையோர்—, ஏன், ஏறக்குறைய எல்லாருமே பிறவிமந்தர்களாவர். மேலும் இவர்களுக்கு ஸந்தான விருத்தி அபரிமிதமாக இருக்கிறது. இந்த உண்மையை விளக்க அமெரிக்காவிலுள்ள ஜுகஸ், கல்லிகாக் (Jukes, Kallikaks) முதலியவர்களின் வம்ச வரலாறுகளை நற்பிரஜாவிருத்தி (Eugenics) சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் பரிசீலனை செய்துள்ளார்கள். உதாரணமாக, "கல்லிகாக்" என்ற குடும்ப வமிசாவளியை ஆராய்ச்சி செய்த டாக்டர் காடர்டு (Dr. Goddard) பின்வரும் புள்ளிவிவரங்களைத் தருகிறார். சாதாரண அறிவுடைய "மார்டின் கல்லிகாக்" என்ற அமெரிக்கன் ஒரு மக்குப் பெண்ணை மணந்துகொண்டான். அதன் வழியில் 480 சந்ததிகள் உண்டானார்கள். அவர்களுள் 143 பேர் பிறவி மந்தர்கள்; 92 பேர் அனுமதேயப் பேர்வழிகள்; 36 பேர் முறைகேடாகப் பிறந்தவர்கள்; 24 பேர் குடிவெறியர்கள்; 3 பேர் காக்கை வலிப்புக்காரர்கள்; 43 பேர் சிறைக் கைதிகள்; 11 பேர் வேசி விடுதிக்காரர்கள்; 82 பேர் குழந்தைப் பருவத்திலேயே மாண்டனர்; 46 பேர் மாத்திரம் ஸஹஜ மானிடர்கள். இந்த கல்லிகாக் முதல்தாரம் தவறியபின் ஒரு புத்திசாலியான பெண்ணை மணந்தான். இதன் வழியாக 496 சந்ததிகள் உற்பத்தியாயின. இவர்களுள் 5 பேர் தவிர மற்ற யாவரும் நல்வழியில் பழகி, கௌரவமாகவும் செல்வாக்குடனும் வாழ்ந்து வந்தனர்.

## பிரத்தியேகச் சக்திகள்

பரம்பரை பிறவிச்சக்தியை மாத்திரம் கொடுக்கும். அதைத் தகுந்த முறையில் பயிற்சி செய்து மலரவைப்பது மனிதனுடைய பொறுப்பாகும். மேலும், சங்கீதத்திறமை, கணிதஞானம், கவித்துவம், நுண்கலைகளில் பாண்டித்தியம் ஆகிய, பிரத்தியேக மகிமைகள் சில குடும்பங்களுக்குத் தனிப்பட்ட ஏகபோக உரிமைகளாக விருக்கின்றன. என்ஜினீர்களின் பிள்ளைகள் எஞ்ஜினீர்களாகவும், டாக்டர்களின் பிள்ளைகள் டாக்டர்களாகவும், வக்கீல்களின் பிள்ளைகள் வக்கீல்க

ளாகவும், பிரகாசிப்பதை நாம் பார்த்திருக்கிறோ மல்லவா? இது ஸகஜம்தான்; ஆனால் இந்த இயற்கை விதிக்கு விரோதமாக, மேதாவியின் பிள்ளை மந்தனாகவும், கணித நிபுணரின் பிள்ளை கணக்கில் மக்காகவும் இருப்பானேன்?—என்று கேட்டால் "தாம்பத்திய கோளாறு என்றுதான் பதில் சொல்ல வேண்டும். அதனால்தான் கல்யாண விஷயத்தில் எத்தனையோ விதிகளும், கட்டுப்பாடுகளும், நிர்ப்பந்தங்களும் ஏற்பட்டுள்ளன. உலகப் பிரசித்திபெற்ற மனநூல்களின் ஆசிரியரான டாக்டர் மக்கேல் (Doctor Mc Dougall), "வாழ்க்கையின் நிர்வாகம்" (The conduct of life) என்ற தம் நூலில் வற்புறுத்தி இம்மாதிரி கூறுகிறார்.—"உன் மனைவியைத் தெரிந்தெடுக்கும்போது, 'காதலுக்குக் கண்ணில்லை'—என்னும் அபத்த பழமொழியினால் மயங்கி விடாதே. அது உண்மையல்ல. காதலுக்குப் பூரண திருஷ்டியுண்டு; காமத்திற்குத்தான் பார்வையுமில்லை, பகுத்தறிவுமில்லை. மணப்பதற்குமுன், மனைவியாகப் போகிறவளின் குறைகளையும், ஊழல்களையும் நன்றாகத்தெரிந்து கொள். தேக வனப்பு வேண்டியதுதான். ஆனால் அதனினும் முக்கியமானவை புத்திகூர்மையும் நற்குண நன்னடத்தையும் என்பதை மறவாதே. நீ உன் மனைவியைத் தெரிந்தெடுக்கும்போதே, உன் குழந்தைகளையும், அவைகளின் புத்திகூர்மை, பௌருஷசக்தி, குணசம்பத்து, ஆகிய இவைகளையும் தெரிந்தெடுக்கிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அதோடு, அவளுடைய, நெருங்கிய பந்துக்களின் குணலக்ஷணங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அந்த உறவினர்களுக்குள் மந்தர்களாவது, பைத்தியக்காரர்களாவது, துன்மார்க்கர்களாவது இருப்பார்களேயானால், உன்னுடைய குழந்தைகளும் அக்குணங்களைக் காணியாட்சியாகப்பெறும் என்பதை ஒரு போதும் மறவாதே."

எனவே மனித முன்னேற்றத்திற்கும், நாகரிகக்கலைகளின் வளர்ச்சிக்கும், அறிவாளிகளான தாய்தந்தையர்கள் காரண பூதர்களாக விருப்பதால், ஒவ்வொரு தலை முறையிலும், ஸமூகத்தில் அறிவிலும், குணத்திலும், நடத்தையும், சிறந்தவர்களாயிருப்பவர்கள் நன் மணம் புரிந்து அடுத்த தலைமுறைக்குக்குப் பெய்றோர்களாக விளங்கவேண்டுமென்பது அவசியமாகிறது.

# (குருளையரின் பாட்டு)

---

K. K. Lakshminarayanan, *Cubmaster D. S. S. N. School, (Walajabad)*

## I Song

"விடுதலை, விடுதலை" மெட்டு

1. குருளையீர் குருளையீர் கூடி ஓடி வருகுவீர்
   கூடிநாமியன்றவரை கூட்டுவோம் உலகினை
2. தேடிவினை யாடுவோம் தேகவலி நாடுவோம்
   பாடி ஓடி உயிர்களுக்குதவ நாளும் ஓடுவோம்
3. நாடுவோம் நாடுவோம் வாய்மைநெறி காணுவோம்
   நாட்டில் நம்மியக்க மதை நாட்டி நன்மை காட்டுவோம்
4. அஞ்சிடோம் அஞ்சிடோம் ஆண்மையில்யாம் விஞ்சுவோம்
   எஞ்சலிலா டிஎஸ், எஸ், என் பள்ளிசிறுவர் நாளுமே.

## II Song

"செந்தமிழ் நாடேறும் போதினிலே" என்ற மெட்டு

1. எங்கும் நிறைந்த இறையவனே உன்றன்
   இணையடிகூடி வணங்குகின்றோம்—எங்கள்
2. குருளையர் உடல், உளம், உறுதிகொள்
   குலவுமருளைப் புரிந்திடுவாய் (எங்கும்)
3. அன்புடன் நாங்கள் தினந்தோறும் நல்ல
   அலுவல் புரிய அருள்புரிவாய் அருள்
4. கொள்ளும் டிஎஸ், எஸ்என், பள்ளியுமே
   குலவி வளர அருள் புரிவாய் (எங்கும்)

## III Song

I எல்லாம் வல்ல இறைவனே நின்னை
ஏத்தி கரங்களால் துதித்திடுவோம்
இங்கும் எங்கும் பங்கமில்லாமல்
துங்கன் உனையே துதித்திட வரம் தா

II பாரத நாட்டுக் குருளையர் நாங்கள்
மங்களமாய் உனைபுகழ்ந்திடவே
சங்கையிலாமல் சந்ததம் வரம் தா
சாரணர் யாங்கள் உய்ந்திடவே,

# கல்வியும் இளஞ்சாரணை இயக்கமும்

(476-ம் பக்கம் தொடர்ச்சி)

**K. K. Lakshminarayanan,** *Cubmaster, D. S. S. N. School,* (*Walajabad*)

**குருளையர் இயக்கம் ஆரம்பித்தல்.**—இயக்கத்திற்கு பெரிய பெரிய வீரர்களின் பெயராவது மகான்களின் பெயராவது தேர்ந்தெடுத்து வைத்து பிள்ளைகளுக்கும், அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தைச் சொல்லி, சிறுவர்களின் மனதை உயர்ந்த நோக்கத்திற்குத் திருப்பினால் நம் இன்றைய இளம்பாலர்களே துருவனைப் போலவும், சிவாஜியைப்போலவும், ராமனைப்போலவும், பின் விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

**சோதனைக்காலம்.**—7-வயது முதல் 12 வயது வரையுள்ள பள்ளிப்பாலர்களை ஒன்றுகூட்டி "குருளையர் இயக்கம்" என்பது என்ன என்பதைப் பற்றியும், பின் நல்ல சாரணனாக ஊன்றுகோல் என்பதையும் பிள்ளைகளுக்குப் புரியுமாறு சொல்லிச் சேர இஷ்டமுள்ளவர்கள் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டுப் பேர்கொடுத்துச் சேரலாமென்று சொன்னால் போதும். இளஞ்சிறுவர்கள் "தேனைக்கண்ட ஈயைப்போல" தானாகவே விரைந்து பெயர் கொடுக்க முற்படுவார்கள். ஆனால் நாம் சந்தோஷப்பட்டுக் கொண்டு மொத்த பேரையும் எழுதிவிடக்கூடாது. அதற்காக ஆவலோடு வரும் பாலகர்களைத் தள்ளிவிடவும் கூடாது. வாரத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை குறித்த நாளில் குறிப்பிட்ட மணியில் "குருளையர் வகுப்புகள்" வைத்து அதற்கு எவனெவன் தவறாமல் வருகிறானோ அவனவன் பேர்களை எழுதிக்கொண்டு அணி (Sixes) பிரிக்க வேண்டும்.

**ஒரேவித உடுப்பு.**—இதற்காகப் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்துவதை விட நாமே குருளையனுக்கு வேண்டிய உடுப்புகளை ஒவ்வொரு வகுப்பு நடத்தும்போதும் போட்டுக்கொண்டு போனால் அவர்களாகவே ஆசையோடு பெற்றோர்களைக் கேட்டுப் பின் உடுப்புகள் போட்டுக் கொண்டு வருவார்கள்.

**பெற்றோர்களின் ஒத்துழைப்பு.**—நாம் பிள்ளைகள் சொன்னதும் பெயர் எழுதிவிட்ட பிறகு பெற்றோர்களைக்கண்டு சொல்லவேண்டும். ஏனென்றால் பள்ளிக்கே ஒழுங்காக அனுப்பாத பெற்றோர்கள் பள்ளி நடந்தபின் நேரத்தில் நடக்கும் "குருளையர் வகுப்பு"களுக்கு நிறுத்துவதில் ஒன்றும் ஐயமில்லை. ஆகையால் நாம் தவறாமல் ஒவ்வொரு குருளையனின் பெற்றோர்களைப் பால்மாராமல் பார்த்து குருளையர் இயக்கத்தில் சேர்ந்தால் படிப்புக்கு கெடுதியல்ல, நல்லதென்றும், நவீன முறைப்படி பாடங்கள் கற்கவும், நல்லொழுக்கங்கள் இளம்பிராயத்திலேயே படியவும், ஏதுவாகும் என்று சொன்னால், பெற்றோர்களே சந்தோஷத்தோடு, பையனுக்கு வாங்கவேண்டியவைகளை வாங்கிக் கொடுத்தனுப்புவார்கள்.

**அணிபிரித்தல்.**—ஒரு சிங்கக்குட்டி ஆசிரியருக்கு 12 குருளையனிலிருந்து 24 குருளையன் வரையில்தான் இருக்கலாம். துவக்கத்தில்

குறைந்த எண்ணிக்கையிலிருந்து படிப்படியாக எண்ணிக்கை அதிகமாவது தான் "இளம் பிறைமதியைப் போல்" இயக்கத்திற்கு அழகு. சிங்கக்குட்டிகளை ஆறுபேர் ஒரு அணிவீதம் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு அணிக்கும் ஒருதலைவரும், ஒரு உபதலைவரும் நியமிக்கவேண்டும். அணிக்கு நாய், பூனை, காகம், என்ற பெயர்களை வைத்து இழிவுபடுத்துவதைவிட தைர்யம், தொண்டு, சாமர்த்தியம், ராஜவிசுவாசஸம், என்பன போன்றவைகளைக் குறிக்க ஒவ்வொரு அணிக்கும் முறையே சிவப்பு, மஞ்கள், பச்சை, நீலம் முதலிய வர்ணங்களின் பெயர்களையோ அல்லது அந்த வர்ணங்களுடைய புஷ்பங்களின் பெயர்களையோ வைப்பது நல்லது.

**பிள்ளைகளின் மனதை உற்சாகப்படுத்தல்.**—முதல் மாதம் சரியான பிள்ளைகளைப் பொருக்கியானதும் 'நீங்கள் சிங்கக்குட்டிகள், எடுத்த காரியங்களை அஞ்சாமல், உற்சாகத்துடன் முடிக்கவேண்டும்' என்று சொல்லவேண்டும். பிள்ளைகள் சாதாரணமாக நமக்குப்பயந்து உள்ளடங்கியிருக்கும் நோக்கங்களையும், கருத்துகளையும், வெளிப்படுத்தாமல் வைத்திருப்பது நாமறிந்தவிஷயம். ஆகையால் முதலில் நாம் சிறுர்களை பயமுறுத்தாமல் அவர்களுடனே நன்ருகக் கலந்துகொண்டுப் போதிய சுதந்திரமும் கொடுக்கவேண்டும். ஆரம்பத்திலேயே சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியுமாறு திருப்பிக்கொண்டும்போகவேண்டும். ஏனென்ருல் சிறிய செடியைப் பிடுங்க மறந்தால் பின் கோடறிகொண்டு வெட்ட நேரிடும். தவிர ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையாது.

பிள்ளைகளுக்கு ஆட்டம் கற்பதில் ஆவலுண்டு. அதை நாம் முதலில் சொல்லிக் கொடுக்கலாம். துவக்கத்திலேயே எல்லாவற்றையும் சொல்லிவிடக்கூடாது. அப்படிச் சொல்லிவிட்டால் பிள்ளைகளுக்குப் போகப்போக உற்சாகம் குன்றும். மேலும் சோலைகளுக்கும், தோப்புகளுக்கும், குன்றுகளுக்கும், ஆறுகளுக்கும், ஓடைகளுக்கும், அருவிகளுக்கும் அழைத்துச் சென்று இயற்கை அன்னையின் தோற்றத்தைக் கண்டுகளிக்கவும், ஆடவும், பாடவும், விளையாடவும், விடவேண்டும். இம்மாதிரி செய்வதால் சிறுர்கள் சலிப்பின்றி ஆவலோடு குருளையர்வகுப்புக்குத் தவருமல் வருவார்கள்.

**குருளையர் இயக்கத்தின் சட்டம், விதி, மூலமந்திரம்.**—துவக்கத்தில் சட்டம், விதி, மூலமந்திரம் முதலியவைகளைத் தமிழ் இலக்கண பாடசூத்திரம்போல் ஒப்பிக்கச் சொன்னுல் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போல் இங்கும் தொந்தரவாயிருக்கிறது என்று எண்ணுவார்கள். ஆகையால் சட்டம், விதி, முதலியவைகள் அடங்கிய பாட்டுகள் சொல்லிக் கொடுத்தால் அவர்களையும் அறியாமலே சீக்கிரம் வந்து விடும். தவிர, ஆங்கிலத்தில் (Yells) இருப்பதுபோல் தமிழிலும் சிம்மநாதங்கள் இருக்கின்றன. அவைகளை சொல்லிக் கொடுக்கலாம்.

# சரித்திரப் பாடதிட்டம்

---

## சென்னை வித்யா இலாகாவால் பிரசுரிக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளின் சரித்திரப் பாடதிட்டம்.

முகவுரை:—இப்பாடதிட்டம் வெளிவந்து இரண்டு வருஷமாகிறது. பல புத்தகச்சாலைகளில் உபாத்தியாயர் பலர் அந்தத்திட்டத்தை அனுசரித்துப் புத்தகங்களைப் பிரசுரித்திருக்கிறார்கள்.

இப்புத்தகங்களைக் கவனித்துப் பார்த்தால், இரண்டொரு விஷயங்கள் ஏற்படுகின்றன. அவையெல்லாம் நல்லகாகிதத்தில் பெரிய எழுத்துகளில் அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றன. சித்திரப்படங்களும், பூகோளப்படங்களும் நிறம்பியிருக்கின்றன.

ஆயினும் அவற்றைச் சற்றுக்கவனமாய் வாசித்துப் பாருங்கள். புதியதாய் போதனை செய்யக்கூடிய வீஷயங்கள் அதிகம் அவற்றில் இல்லை. அவசர அவசரமாய் பாடப்புத்தகக் கமிட்டியார் அங்கீகாரத் துக்காகப் பல தயார்செய்யப்பட்டவை எனத்தோன்றுகின்றன. பிரசுர கர்த்தர்களும், ஆசிரியர்களும் அம்மாதிரி புத்தகங்களை நிதானமாய் யோசித்தெழுத அவகாசம் போதாதென அவ்வருஷப் பத்திரிகைகளில் குறைகூறியது நமக்குள் பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

ஆங்காங்கு உபாத்தியாயர் சங்கங்களில் வித்யாதிகாரிகளும், ஜில்லா கில்டாரும் (Guild) இப்பாட திட்டங்களைப்பற்றி உபந்நியாசங் களையும் செய்திருக்கிறார்கள்.

இங்கு நான் இப் பாட திட்டத்தில் ஒவ்வொரு பாடத்தையும் எடுத்துக்கொண்டு, அதைப்பற்றி என்ன சொல்லலாம். எப்படிச் சொல்லலாம், போதனைக்குத்தக்க உபகரணங்கள் எவை? என் னும் பல விஷயங்களைப்பற்றிச் சொல்வது என்று தீர்மானித் திருக்கிறேன்.

### மூன்றாவது வகுப்புப் பாடதிட்டம்.

இவ்வகுப்புப் பாடதிட்டம் பின் வருமாறு :—

1. ராமாயணத்திலிருந்தும், மகாபாரதத்திலிருந்தும் கதைகள்.
2. அரிச்சந்திரன் கதை.
3. சிபிச் சக்கிரவர்த்தி கதை.
4. புத்தர் கதை.
5. அசோகர் கதை.
6. ஸம்யுக்தை ராணி கதை.

7. சித்தூர்ப் பத்மினி கதை.
8. பாபரும் அவரது குமாரரின் நோயும்.
9. நூர்ஜஹான் கதை.
10. அந்தந்த விடத்திய சரித்திரமும், கதைகளும் 11. சரித்திரப் பிராதான்ய மடைந்த அந்தப்பிரதேசக்காரர் இருவரின் கதைகள். உதாரணம் :—

(1) சௌந்தர பாண்டியன் (2) திருமலை நாய்க்கர் (3) ராணி மங்கம்மாள் (4) ராஜராஜ சோழர் (5) ராஜேந்திர சோழர் (6) குலோத்துங்க சோழர் (7) சேரன் செங்குட்டுவன் (8) புகழேந்திப் புலவர் (9) நரசிம்ம வர்மன்.

இந்தப் பாடதிட்டத்தைப்பற்றிச் சில குறைகள் சொல்லலாம். அவற்றை இறுதியில் சுருக்கமாகச் சொல்லுகிறேன். இப்பொழுது இதைப்பார்த்தால் எனக்குத் தோன்றும் இரண்டொரு வியக்தமான விஷயங்களை எடுத்துக்கொள்ளுகிறேன்.

(1) இங்கு ஒவ்வொரு பாடமும், ஒருவரைப்பற்றி கதையாகச் சொல்லப்படவேண்டுமென்பது பாடதிட்டம் தயாரித்த கனவான்களின் அபிப்பிராயம். சிற்சில புத்தகங்களில் மதராஸ், மாவலிபுரம், காஞ்சீபுரம், மேலூர் என சரித்திர சம்மந்தமுடைய இடங்களைப்பற்றி இவ் வகுப்புக்குப் பாடம் சொல்லியிருப்பது பாடதிட்டத்துக்கு முரணாகும்.

(2) சொல்லப்படவேண்டியது கதை; சரித்திரப் பாடமில்லை. உதாரணமாக:-புத்தர் கதை என்றால் அவருடைய பிறப்பு, வளர்ப்பு, இளமைப் பருவம், மனோநிலை, துறவு, ஞானோதயம், மதசித்தாந்தம், மதப் பிரசாரம் முதலிய விஷயங்களைச் சொல்லவேண்டாமென்பது எனது அபிப்பிராயம், அவற்றைச் சரித்திரக்கதைகளில்லாது சரித்திரப் பாடங்களில் மேல் வகுப்புகளில் உசிதமான அளவு சொல்வது தகும். இவ்வகுப்பில் அப்பிரானுடைய சரித்திரத்தில் ஏதாவது இரண்டொன்று விஷயத்தைப்பற்றி ருசிகரமான சிறுகதையாகச் சொல்வது சரியாகும்.

இங்கு சொல்லப்படும் கதைகள் சிறியவையாயிருத்தல் வேண்டும். ஏதோ ஒன்று; மிக்க அவசியமானால், இரண்டு; விஷயங்களைப்பற்றியே இருக்கவேண்டும்.

(3) கதைகளை நமது நாட்டில் வெகுகாலமாகச் சொல்லிக் கேட்பது வழக்கம். உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு ஒரு பாடத்தைக் கதைகளாக முதலில் இரண்டொரு தடவை சொல்லவேண்டும். அவர்களை உசிதமான கேள்விகேட்டு, அவர்கள் அப்பாடத்தைத்தெரிந்து கொண்டார்களா என்று கவனிக்கவேண்டும். அவர்களில் சிலரை அதைத் திரும்பச் சொல்லும்படிச் செய்யவேண்டும். பிறகு புத்தகம் யாதேனுமிருந்தால் அதை வாசிக்கச்செய்யலாம். சொல்லிய கதையை ஒட்டிப் புத்தகம் இருந்தால் அதைப் பிள்ளைகள் மௌனமாய் வாசித்து அறிய இடந்தரலாம்.

**உபகரணங்கள் :**—சரித்திரபாடத்திற்குறிய உபகரணங்கள் பல. அவை இவ்வகுப்புக்கு அவசியமில்லை. கதை சொல்லுங்கால், அதை ருசிகரமாக்கச் சித்திரப்படங்கள் அவசியம். அவை போதிக்கும் பாடத்தைப் பொருத்தவை. நமது புத்தகங்களில் இந்தக் காரியத்துக்குத் தகுதியான படங்கள் அதிகம் இல்லை. ஆயினும் இல்லாமல் போகவில்லை. கதை ஒன்றைச் சொல்லும்போது அதைப் புத்தகத்திலிருக்கும் ஒரு படத்தை ஒட்டிச் சொன்னால் பிள்ளைகளின் கவனம் அக்கதையில் செல்லுமல்லவா ?

இவ்வகுப்புப்பிள்ளைகள் (இதற்கு மேற்பட்ட சில வகுப்புப்பிள்ளைகள்கூட) தேசப்படம் எழுதக் கற்கவேண்டாம். ஆனால் சரித்திரப்பாடம் நடக்கும்போது ஒரு இந்தியா படம் வகுப்புக்குமுன் இருப்பது நலம். இவ்வகுப்புப் பாடங்களில் ஒன்று தவிர மற்றவையெல்லாம் கங்காதேச ராஜ்யங்களைப்பற்றியும் தமிழ்நாட்டு ராஜ்யங்களைப்பற்றியுமே இருக்கின்றன என்பதைக்கவனிக்க. ஆதலால் பெயர்கள் அதிகம் குறிப்பிடாத வட இந்தியா படம் ஒன்றில் கதாநாயகர்கள் வாழ்ந்த இடங்களைக் காட்டுவதே முதல் பாகத்திலுள்ள கதைகளுக்குப்போதும். தமிழ்நாட்டுப் படம் இரண்டாம் பாகத்துக்குப்போதும், முடிவாக. ஆரம்ப வகுப்புகளுக்குச் சரித்திரப் பாடங்களைப்பற்றி ஒரு பேராசிரியர் சொல்லியிருக்கும் சில விஷயங்களை இங்குக் குறிக்கிறேன் :—

சரித்திர ஞானம்புகட்டும் இயற்கைவழி கதை சொல்லுவதாம். ஆரம்பத்தில் தாய் தகப்பன்மார் வீட்டில் குழந்தைகளுக்குக் கதை சொல்லுவதுபோல், உபாத்தியாயரும் கதை சொல்லவேண்டும். மத்திய வகுப்புகளிலும் மேல் வகுப்புகளிலும்கூட அப்படித்தான். அவ்வகுப்புகளில் விஷயம் நன்கு புலப்படலாம். அறியும் சக்தி அதிகரிக்கலாம். தத்துவம் விளங்கலாம். ஆனால் கதையாகச் சொல்லுவதே போதனையில் அங்கும் பிரதானமானது. சரித்திரவிஷயங்கள் கணித சாஸ்திர தத்துவங்களைப்போல் ஏற்கனவே கொடுத்துள்ள விஷயங்களிலிருந்து தொகுக்க முடியாது.. இலக்கண விதிகளைப்போல் உதாரணங்களிலிருந்து கண்டறிய முடியாது..........சரித்திரப்பாடப் புத்தகத்தில் ஒரு பகுதியை வீட்டில் படித்துவரும்படி மாணுக்கர்களைச் செய்து, பிறகு வகுப்பில் அதிலுள்ள விஷயங்களைச் சர்ச்சை செய்வதுகூடச் சரியன்று. வீட்டில் படிக்கும் விஷயங்கள் பிள்ளையின் மனதில் பதிகிறதில்லை. உபாத்தியாயர் கதை சொல்லும்பொழுது மேலென்ன சொல்லுவாரோ வென்று எதிர்பார்த்தலால் சொன்னவிஷயம் பிள்ளையின் மனதில் பதியலாம். நமது அபிப்பிராயப்படி சரித்திரம் போதிக்கும் முறை ஆரம்பத்தில் ஒன்றே. அது முடிந்தவரையில் ருசிகரமாய், பிள்ளைகள் பரபரப்புடன் கேட்குமாறு கதை சொல்லுவதுதான். சில சமயங்களில் குழந்தைகளுக்கு விளங்கும்போல் இருந்தால் அக்கதையைப்பற்றிச் சிறிது சர்ச்சை செய்யலாம்.

—(ந்யூபாவர் துரை.)

# குழந்தை பிறந்து வளர்கிற கதை.

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

ஈசுவர சிருஷ்டியில் தலைசிறந்து விளங்குவது மானிட ஜன்மம். அவன் குழந்தைக்கு அறிவை ஊட்டுவது அரிய சேவைதான். குழந்தையே குருவுக்கு குருநாதனாக விளங்குகிறது. குருவானவர் தமது குழந்தைகளின் பூர்வகதையை அறிவதில் அவா உள்ளவராக விருக்க வேண்டும். அக்குழந்தையே நம்மை நோக்கி "அன்புள்ள ஆசிரியரே! எனக்குக் கல்வி ஊட்டுகிற தாங்கள் நான் பிறந்து வளர்ந்துவரும் கதையை அறிவீரோ? அக் கதையை எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டால் நாம் அக்கதையை நன்கு தெரிந்துகொண்டு சொல்ல வேண்டும். இயற்கை அன்னை இயல்பாக ஊட்டிவரும் ஞானப்பாலினால் தாமே தமது அறிவை எப்படி விருத்திசெய்கிறார்கள் என்பதையும் எவ்வாறு இயற்கை முறைக்கு அனுகுணமாக செயற்கை முறையை எவ்வாறு அமைத்துக்கொள்ளக்கூடும் எனவும் யூகிக்க நமக்கு சந்தர்ப்பம் வாய்க்கும். அதன்பொருட்டே யான் பிரத்தியக்ஷமாகக் கண்ட சில குறிப்புகளை எழுத முன்வந்தேன். ஆசிரியர் பலர் இக் குறிப்புகளைக் கொண்டு தமது சொந்த அனுபவங்களை ஒத்துப் பார்க்கவும், மற்றும் கவனிக்கவும் இடம் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

சாதாரணமாகக் குழந்தை பூமியில் ஜனனம் ஆனபிறகே நாம் அக் குழந்தையின் பிறப்பு வளர்ப்பு கதையை அறியக்கூடும். ஆயினும் அறிஞர்கள் குழந்தையின் கர்ப்பகால வளர்ச்சியையும் பற்றிக் குறிப்பு வைத்திருக்கிறார்கள். இங்கு காணப்படுவது "கர்ப்போபனிஷத்" என்ற நூலிலிருந்து வாசித்துக் காட்டியபடி எழுதப்பட்டுள்ளது. கர்ப்ப கால வளர்ச்சியும் ரொம்ப விநோதமாகவே யிருக்கிறது. நெடுங்கால அனுபவம் வாய்ந்த பாட்டிமார் குழந்தையின் முதல் வருஷ வளர்ச்சியை எட்டு வரியில் வெகு சுலபமாக அமைத்துவிட்டார்கள்.

மூன்றும் மாதம் முகம் பார்க்கும்
நான்காம் மாதம் நகரும்
ஐந்தாம் மாதம் குப்புறப்படுக்கும்
ஆறும் மாதம் நீந்தும்
ஏழாம் மாதம் தவழ்ந்து இருக்கும்
எட்டாம் மாதம் எட்டி அடிவைக்கும்
ஒன்பதாம் மாதம் வீடேல்லாம் ஓடும் (ஊரெல்லாம்)
பத்தாம் மாதம் பல் முளைக்கும்

இதன் உண்மையையும் அடியிற்கண்ட குறிப்புகளிலிருந்து கவனிக்க முடியும்.

## குழந்தைகளின் வளர்ச்சி.

**கர்ப்ப காலம்**

முதல் நாள்.—திரவரூபம்
7-ம் நாள்.—குமிழி
15-ம் நாள்.—பிண்டம்
1-ம் மாதம்.—கடின ஸ்வபாவம்
2-ம் மாதம்.—தலையமைந்திட ஏற்பாடாகிறது
3-ம் மாதம்.—பாதத்தின் முதல் ஸ்வரூபம் ஆரம்பம்
4-ம் மாதம்.—சரீரத்தில் கடினமான பிரதேசம் உண்டாகிறது.
5-ம் மாதம்.—பிருஷ்டபாகம் அமைகிறது
6-ம் மாதம்.—முகம், நாசி, கண், காது இவைகளுக்கு ஏற்ற இடம் அமைகிறது
7-ம் மாதம்.—ஜீவன் உண்டாகிறது
8-ம் மாதம்.—ஸர்வலக்ஷண ஸம்பூர்ணமானது
9-ம் மாதம்.—ஸர்வலக்ஷணம், ஞானம், பூர்வஞானம் தெரிகிறது. (இந்த விஷயத்தில் மாத்திரம் அபிப்பிராய பேதம் ஏற்படலாம். நமது முன்னோர்கள் இதில் நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறார்கள். சற்று வயதுவந்த குழந்தைகள் பூர்வஜன்மத்தைக் குறித்துச் சொல்லும் விஷத்தைப்பற்றித் தினசரிப் பத்திரிகைச் சமாசாரம் அடிக்கடி தெரிவிக்கிறது.)

10-ம் மாதம்.—பூர்வஞானம் மறைந்து மாயையில் பிரவேசித்து பூலோகத்தில் ஜனிக்கிறது.

**முதல் வயது**

முதல் 3 மாதம்.—தேகம் கம கம வென்றிருக்கவும் அடிக்கடி ஆகாரம் உட்கொள்ளவும் இச்சிக்கிறது. வெளிச்சம் பார்க்கிறது. தன் மீதும் படுக்கைமீதும் விரிக்கப்பட்ட துணிகளை கையினால் வாரி எடுத்துக் கொள்கிறது. முகம் பார்க்கிறது. தனது தாயைத் தெரிந்துகொள்ளுகிறது. மிருதுவான வஸ்து மேலேபட்டால் சந்தோஷிக்கிறது. தன் கையையே நக்கிப் பார்க்கிறது.

4-ம் மாதம்.—தனது விரல்களையும், தன் கையில் அகப்படும் வஸ்துக்களையும் வாயண்டை எடுத்துச்செல்கிறது. தனக்குப் பின் நிற்பவர்களைப் படுத்தபடியே பின் பக்கமாகப் பார்க்கிறது. தாயையும் தன்னோடு பன்முறை பழகினவர்களையும் கண்டு சிரிக்கிறது.

5-ம் மாதம்.—குப்புறப் படுக்கிறது. ப், ம், ல் எனப் பலவாறு சப்திக்கிறது. பிரகாசமான வஸ்துக்களைப் பார்க்கிறது. காலை இழுத்து இழுத்து நீந்தப் பிரயத்தனம் செய்கிறது.

**6, 7-வது மாதம்.**—கையில் ஒரு கிலுகிலுப்பையைப் பிடித்து ஆட்டி அசைத்து அதன் சப்தத்தைக் கேட்டுக் களிக்கிறது. தொட்டி லிருந்து தொங்கும் பல நிற வஸ்துக்களைப் பிடிக்க யத்தனம் செய்கிறது. கைவிரல்களை மடித்து வைத்துக்கொள்ளுகிறது. சில சமயம் மூடிமூடித் திறக்கிறது. இரண்டு கைகளையும் சேர்த்துக்கொள்ளுகிறது. சற்று தூரத்திலுள்ள வஸ்துக்களையும் பார்க்கிறது. நீந்திச் செல்லும் வழியில் ஏதாவது இருந்தால் அதைத் தனக்கு ஆதாரமாகக் கொள்ளுகிறது. தன் கட்டை விரலை வாயண்டை கொண்டுவருகிறது. மற்றும் சில சப்தங் களைச் செய்கிறது. தண்ணீரில் அலைந்து சந்தோஷிக்கிறது. கையில் ஒரு பொம்மை வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறது. நீந்திச் செல்லு கிறது. உட்காரவைத்தால் தலையை நிமிர்த்திவைத்துக்கொள்ள யத்தனம் செய்கிறது. கையில் எடுத்துக்கொண்டால் கண், காது, மூக்கு, வாய் இவைகளைத் தடவிப் பார்க்கிறது.

**8-ம் மாதம்.**—குப்புறப் படுத்திருக்கும் பொழுது தலையைப் பின் னால் திருப்பிப் பார்க்கிறது. வீட்டிலுள்ள நாய், பூனைகளைப் பார்க் கிறது. உட்கார்ந்து கொள்ள ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு பொம்மை வைத்துக்கொள்ளுகிறது. கையில் கெண்டியைப் பிடித்துக்கொண்டு குடிக்கிறது.

**9-ம் மாதம்.**—வாசற்படி தாண்டப் பார்க்கிறது. நிற்கவைத் தால் குதித்துக் குதித்துக் களிக்கிறது. சில விளையாட்டுக்களில் சந் தோஷிக்கிறது.

உதாரணம்:—கண்ணை மூடிக்கொண்டு "இட்டாச்சு" என்றால்கண் ணைத்திறக்கிறது. இந்த விளையாட்டை அடிக்கடி செய்யப்பிரியப்படுகிறது.

**10-ம் மாதம்.**—தொட்டில் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நிற் கிறது. தோழர்களுடன் விளையாட ஆசைப்படுகிறது. கையில் ஒன்றைக் கொடுத்தால் அதைக் கீழே போட்டு எடுத்துக்கொடுக்கும்படி செய் கிறது. இம்மாதிரி பல முறை செய்ய ஆசைப்படுகிறது. நன்றாய் உட்காருகிறது. மண்ணை நக்குகிறது. தவழ்ந்து செல்கிறது. தனக் குப் பிரியமானதைக்கொண்டு அதிகமாகச் சிரிக்கிறது. ஒருவரைக் கூப் பிடுவது போல் கையைக் காட்டுகிறது. ஒரு சாமானைப் பூமியிலிருந்து எடுக்கத் தனது கட்டைவிரலையும் ஆள்காட்டி விரலையும் வெகு சாமர்த் தியமாகச் சேர்த்துக்கொண்டு எடுக்கிறது. தனக்குத் தெரிந்தவர்கள் கூப்பிட்டால் அதற்குப் பதில் அளிக்கிறது.

**11-ம் மாதம்.**—தானே நிற்கிறது. கஷ்டமா யிருந்தால் கீழே உட்கார்ந்து விடுகிறது. உட்கார்ந்தபடியே கதவை மூடித்திறக்கிறது. பயம் தெரிகிறது. உதாரணம்:—உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்கு இறங்கப் பயப்படுகிறது. சுவரைப் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பிக்கிறது. தள்ளும் வண்டியைப் பிடித்துக்கொண்டு கொஞ்சதூரம் நடக்க ஆரம்பிக்கிறது.

12-ம் மாதம்.—சந்திரனைக் காட்டினால் பார்க்கிறது. பல் முளைத்துக்கொண்டே வருகிறது. நாயைக் கூப்பிடுகிறது. தூணைச் சுற்றிச் சுற்றிப் பலதரம் வருகிறது.

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த குழந்தையின் முதல் வயது பூர்த்தியாகிறது. அச்சமயம் அப்தபூர்த்தி கலியாணம் அதாவது ஆண்டு நிறைவு கொண்டாட்டம் நடைபெருகிறது. அன்று அக்குழந்தையைப் பலர் ஆசீர்வதிக்கின்றனர்.

இனி அக்குழந்தையின் வளர்ச்சியைக் கவனிப்போம்.

2—வது வயது.

'மாமா' 'பாபா' 'தாதா' என்ற வார்த்தைகளைச் சொல்லுகிறது. திண்ணையிலிருந்து கீழே இறங்கும்பொழுதும் படியில் காலை வைத்துப் பிடித்துக் கொள்ளாமல் ஏறும்பொழுதும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சி செய்கையில் தன்பலம் எவ்வளவு என்று அறிந்துகொள்ளுகிறது. கனத்த பலகையை எடுத்துச் செல்ல பிரயத்தனப்படுகிறது. முடியவில்லை ஆனால் கத்துகிறது. யாராவது உதவி செய்தால் காரியத்தைச் செய்து விட்டதாகத் திருப்தி யடைகிறது. வெளியே வந்து விளையாடப் பிரியப்படுகிறது. கைவண்டி தள்ளுகிறது. கையில் ஒரு டம்ளரைவைத்து வாயண்டை எடுத்துச் சென்று குடிக்கிறது. சில சாமான்களைச் சேர்க்கிறது. பிரகாசமான வஸ்துக்களையும் புஷ்பங்களையும் பார்க்கிறது. நடக்கிறது. தன்கையில் ஏதாவது தூக்கிக் கொண்டு செல்கிறது. ஆச்சரியத்தைக்காட்டுகிறது. எதைக் கண்டாலும் 'பாத்தியா' என்கிறது. சாமான்கள் இருக்கும் இடத்தையும் சில சந்தர்ப்பங்களையும் தெரிந்துகொள்ளுகிறது.

(உதாரணம்—) சர்க்கரை, பிஸ்கோத்து முதலியன இருக்கும் இடம் தெரியும்.

தகப்பனார் தாயார் வெளியில் போகும் சந்தர்ப்பங்களைத் தெரிந்து கொள்ளும். ஒருவர் செய்கிறது போல செய்ய யத்தனம் செய்கிறது.

(உதாரணம்.—) பந்தை உதைக்கிறது.

பென்விலால் எழுதுகிறது. கைதட்டுகிறது. நமஸ்காரம் செய்கிறது. சீப்பால் வாரிக்கொள்ளுகிறது. கேட்கிற சப்தம்போல் தானும் சப்தம் செய்கிறது.

(உதாரணம்.—) ரயில், பூனை, நாய் போல் கத்துகிறது. வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிடுகிறது. தகப்பனார் வெளியே யிருந்து வீட்டிற்கு வந்தால் அவர் வருகையைத் தெரிவிக்கிறது. பாட்டுக்களைக் கேட்டு களிக்கிறது. தானும் 'பெ' என்று பாட ஆரம்பிக்கிறது. சில வார்த்

தைகள் வர ஆரம்பிக்கின்றன. தா, காசு, பாத்தியா, வாண்டாம், சட்டை, நானும், ஆச்சு, அண்ணு, அப்பா, தாதா, மாமா, காகா.................. ...முதலியன. சில கேள்விகளுக்கு வாயாலும் செய்கையாலும் பதிலளிக்கிறது. வேண்டாம், ஊஹூம் தலையை ஊஹூம் என்று அசைக்கிறது. மாடிப்படி ஏறுகிறது. பெட்டியிலுள்ள சாமானை எடுத்து கீழே வைத்து மறுபடியும் அவைகளைப் பெட்டியினுள் வைக்கிறது. சாக்கட்டி, பென்ஸில், கரி இவைகளைக்கொண்டு எழுதுகிறது. தனது தேகத்திலுள்ள உறுப்புக்களின் பெயரை அறிகிறது. மடித்த காகிதம் கீழே கிடந்தால் எடுத்துப் பிரித்துப் பார்க்கிறது. எந்தப் படங்களைக் கண்டாலும் 'பாப்பா' என்கிறது. பல படங்கள் கலந்திருந்தாலும் தனக்கு வேண்டியவற்றைப் பொறுக்கி எடுக்கிறது. தனது சாமானைத் தெரிந்து கொள்கிறது. தனது டமளர், கெண்டி முதலியவற்றை எடுத்து வருகிறது. தான் தப்பு செய்ததைத் தெரிந்துகொள்கிறது.

குழந்தைக்கு இப்பொழுது 2 வயது பூர்த்தியாகிறது. இனி 3 வது வயதில் காணப்படும் தேகமான வளர்ச்சிக் கதையைக் கவனிப்போம்.

## 2-3 வயது

குழந்தையின் பாஷையும் பேச்சும் வளர்கிறதைக் கவனிக்க ஆச்சரியமாக இருக்கிறது. இந்தக் காலத்தில் குழந்தையின் பாஷை எவ்வளவு தூரம் மேன்மை அடைகிறது. என்று அறிய குழந்தை சொல்லும் வார்த்தைகளைக் கணக்கிடுவது உபயோகமாயிருக்கும். படங்களைத் தெரிந்து கொள்ளுகிறது. ஒரு சிறு கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லப் பிரியப்படுகிறது. நாம் சொன்னபடி செய்கிறது; வா, போ, உட்கார் முதலியன. எவ்வளவு சாமான் இருந்தாலும் மூன்று என்று சொல்லுகிறது. எதைக் கண்டாலும் 'எது என்ன' என்று கேட்கிறது. மூன்று இரண்டு என்று தாறுமாருகச் சொல்லுகிறது. பொம்மை, விளையாட்டுச் சாமான்கள் இவைகளில் பிரியப்படுகிறது. சிறியது, பெரியது, பாதி, கொஞ்சம் என்று சொல்லுகிறது. உடைகளை உடுத்திக் கொள்ளுகிறது. உடைகளை உடுத்திக்கொள்ள ஆசைப்படுகிறது. அழுக்குப்படிந்த இடம், சேறு, சாணி இவைகளில் காலைவைத்து விட்டால் வெறுப்பைக் காட்டுகிறது. தான் தினசரி போய்வரும் வழியை ஞாபகம் வைத்துக் கொள்கிறது. 'இப்படி' 'அப்படி' 'வாண்டாம்' 'வா' என்று சொல்லுகிறது. உற்சவாதிகள், பண்டிகைகள், வீட்டு விஷயங்கள் இவைகளைப் பற்றிக் கொஞ்சம் ஞாபகம் வைத்துக்கொள்கிறது. படங்களைப் பார்த்தால் சந்தோஷிக்கிறது. கண்ட படி எண்ணுகிறது. இன்னும் எண்ணங்கள் சரியாய் மனதில் பதியவில்லை. குழந்தைக்கு வயது மூன்று பூர்த்தியாகிறது. இனி நான்காவது வயதில் காணப்படும் தேகமன வளர்ச்சியைப் பற்றிக் கவனிப்போம்.

## 3-4 வயது

சிறு கதைகளைக் கேட்கப் பிரியப்படுகிறது. அதன் பேச்சு அபிவிருத்தியடைகிறது. சிறு விளையாட்டுக்களில் சேர விரும்புகிறது. செப்பு, விளையாட்டுச் சாமான்களால் சில விளையாட்டுகள் விளையாடும். பதிய வைக்கும் உருவங்களை எடுத்துச் சரியாக பதியவைக்கும். சில வஸ்துக்களின் உபயோகம் இன்னதென்று அறிகிறது. வட்டங்களும் கோடுகளும் வரைகிறது. சிறு சிறு குழந்தைப் பாட்டுக்களைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறது. பாட புஸ்தகங்களைப் படிப்பதில் விருப்பம் காட்டுகிறது. 'ஏன் அப்பா' 'எதற்காக' என்று பல கேள்விகளைக் கேட்கிறது. நிறங்களைத் தெரிந்து கொள்ளுகிறது.

ஆகவே நான்கு வயது முடிந்தது, நான்கு வயதுக் குழந்தையின் பூர்வ கதை இதுதான். ஆசிரியர்களுக்கு இக்கதை ஓர் பெரும் விருந்து ஆகும். இக்கதையிலிருந்து அக்குழந்தைக்குப் பாடம் கற்றுக் கொடுக்கத் தாம் எவ்வாறு தமது முறைகளை அமைத்துக் கொள்ளக் கூடும், என்று கவனிக்க இடமளிக்கிறது.

### குழந்தையின் வளர்ச்சி விநோதங்கள்.

இம்மாதிரி தேகம் வளர்ந்து முகம் மலர்ந்து மனது அபிவிருத்தியடைந்து உலகவாழ்க்கையில் தாமும் பங்கு எடுத்துக்கொள்ளும் குழந்தையின் பூர்வ கதையில் பல ஸ்வாரஸ்யமான அம்சங்கள் காணப்படுகின்றன. பாஷாபிவிருத்தி, பார்த்துச் செய்தல், வஸ்துக்களுடன் பழக்கம், குதூகலமான விளையாட்டு, புலன் பயிற்சி கற்பனைசக்தி இவை யாவும் குடும்ப வாழ்க்கை சம்பவங்கள் மூலமாகவே மேலோங்குகின்றன. கூட்டாளிகளுடைய யோஜனைகள், பெற்றோர்களுடைய சமயோஜித வழிகாட்டுதலும் பலனைக்கொடுக்கின்றன. பல அம்சங்களும் தாமாகவே வளர்ந்துவர குழந்தையும் ஒருமிக்க வளர்ந்துவருகிறது. ஆகவே ஒரே ஒரு அம்சத்தை மாத்திரம் மிகப்படுத்தி அதை மாத்திரம் வளர்த்துவரப் பிரயாசைப் படுவோமானால் அது பூர்ண விருத்தியை அளிக்காது. ஒரு பாகம் விருத்தியடைய மற்ற அம்சங்கள் மழுங்கிப்போகும். எப்படி ஆகார விஷயத்தில் எலும்பு, தோல், கண்பார்வை, தேகபுஷ்டி, நல்ல இரத்த ஓட்டம் இவை எல்லாம் ஒருமிக்க மேன்மை பெறவேண்டுமென்று அவை யவைகளுக்கென்று கூறப்பட்ட சத்துப்பொருள்கள் பலவற்றைக் கலந்து கொடுத்து வருகிறோமோ அவ்வாறே கல்வி முறையிலும் தேகம், மனது ஆத்மா மூன்றும் மேலோங்குவதே சரியான கல்வியாகும். அது பல சக்திகளோடு கூடிய ஒரு சக்திஸ்வரூபம்.

குழந்தையின் விளையாட்டில் ஒரு வேடிக்கையிருக்கிறது. ஒரு கடவுள் முத்தொழில் புரிய மூன்று உருவங்கொண்டு செய்கிற ஆக்கல் நிலை பெறுத்தல், நீக்கல் என்ற விளையாட்டுகள் நமது குழந்தையினிடத்

திலும் காணப்படுகிறது. ஒரு காரியத்தைச் செய்ய முயலுகிறது; செய் ததைக் கண்டுகளிக்கிறது. பிறர் அதைப்பார்த்து மெச்சும்படி தூண்டு கிறது. திடீரென்று ஒரு எண்ணம் வர அதைக் கலைத்துவிட்டு வேறொன்று கட்டுகிறது. ஒரே குழந்தைதான் பல லீலைகளைச் செய்து காட்டுகிறது.

## குழந்தைகளின் விளையாட்டு சாமான்கள்.

குறத்தி பிச்சை கேட்க வருகிறாள். கையில் கிலுகிலுப்பை எடுத்து வருகிறாள். வாசற்படியில் நிற்கும் குழைந்தைக்கு ஒரு கிலு கிலுப்பைக் கொடுக்கிறாள். வீட்டிலுள்ளவர் அவளுக்குக் கொஞ்சம் அரிசி போடுகிறார். குழந்தைகளுடன் கூடிய நெருங்கிய அனுபவத் தில் கிலுகிலுப்பை ஒரு சிறந்த விளையாட்டு சாமான் என்று எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். குழந்தை கையில் பிடித்துக்கொள்வதற்கு ஏற்ற தாக விருக்கவேண்டும். அது மல்லாந்து படுத்து கையை ஆட்டும் பொழுது சப்தம் பண்ண வேண்டும். அந்த சப்தம் அதற்கு சந் தோஷத்தை அளிக்கிறது. தட்டுக் கெட்டு மேலே பட்டாலும், அந்த வலியைப் பொருட்படுத்தாதபடி அவ்வளவு இலேசாக அந்த சாமான் அமையப்பட வேண்டும். வயதுக்கு தக்கபிரகாரம் உள்ள விளையாட்டு சாமான்களின் விபரம்.

1 வயது:— வர்ணம் கொடுத்த விளையாட்டு சாமான்கள், கிலு கிலுப்பை, பொம்மைகள்.

2 வயது:—குழந்தைகள் பிடித்துத் தள்ளும் வண்டி, பந்துகள், கையில் அழுத்தக்கூடிய ரப்பர் பொம்மைகள், மிருக பொம்மைகள், அசவு உண்டாக்கக்கூடிய பொம்மைகள்.

3 வயது:—மரத்தினால் செய்த விளையாட்டு சாமான்கள், ரயில் வண்டி பொம்மைகள்.

4 வயது:—பம்பரம், மரக்கட்டைகள்.

பொதுவாக பார்க்குமிடத்து பொம்மைகள் செய்கிறவர்கள் குழந்தைகள் தேக மனவளர்ச்சியையும் நெருங்கின அனுபவத்தைக் கொண்டே பொம்மைகள் செய்துவருகிறார்கள். உபாத்தியாயர்களாகிய நமக்கு இவ்விஷயத்தில் சிரத்தை வேண்டும். சுமார் 9 கோடி ரூபாய்க்கு நாம் ஜப்பான், ஜர்மனி, இங்கிலாந்து இங்கிருந்து வரும் பொம்மைகளை வருஷா வருஷம் வாங்கி வருகிறோம் என்று யான் ஒரு சஞ்சிகையில் படித்தது ஞாபகம் வருகிறது. நமது தேசத்திலும் குழந்தை பொம் மைத் தொழில் விருத்தியாகுமானால் விசேஷ மதிப்பு ஏற்படும்.

## குழந்தைகளின் மனோ வளர்ச்சியைப் பரீக்ஷை செய்யும் விதம்.

குழந்தைகளின் தேகமன வளர்ச்சியைக் கவனிக்குங்கால் இன்னென்ன வயதில் அவர்கள் எவ்விதமான வளர்ச்சியை அடைந்திருக்க

வேண்டும் என்று ஒருவருக்கு யூகிக்க முடியும். அப்பேர்ப்பட்ட அனுபவத்தின்படி ஒவ்வோரு வயதிலும் குழந்தைகள் வளர்ச்சியை தீர்மானித்திருக்கிறார்கள். பால்மணம் மாறாத பச்சைக் குழந்தைக்கும் பரீக்ஷையா என்று ஆச்சரியப்படக்கூடும். அது பள்ளிக்கூட பரீக்ஷை அல்ல. மனோசாஸ்திரிகள் கண்டறிந்த நூதன ஏற்பாடுகள் தாம். முதலில் சொல்லப்பட்ட வளர்ச்சியையும், அடியிற்கண்ட பரீக்ஷை முறைகளையும் கவனிக்க இவை ஒன்றுக்கொன்று மிகப் பொருத்தமாக இருக்கின்றனவென்றே சொல்ல முடியும்.

## 1 வயது

1-ம் மாதம் :—ஏதாவது ஒரு பொருளைப் பிடித்துக்கொள்ளத் தெரிகிறதா?

6-ம் மாதம் :— ஒருவர் பிடித்துக்கொள்ளாமல் உட்காரத் தெரிகிறதா? தனக்குப் பழக்கப்பட்டவர்களை அறிந்துக்கொள்கிறதா?

1 வருஷம் :—சில சாமான்களைக் கொண்டு செய்கிற சப்தம் போல் செய்ய முடியுமா?

## 2 வயது

நெருப்புப்பெட்டிகளாலும் கட்டைகளாலும் ஏதாவது கட்டுமா?

## 3 வயது

சில வஸ்துக்களின் உருவம், பருமன் இவற்றை அறிய முடியுமா? பெரியது சிறியது என்று பகுத்தறியும் சக்தி இருக்கிறதா? சில சாதாரணப் பொருள்களை உடனே அறிந்து கொள்ளுமா? (இந்தக் காலத்தில் குழந்தையின் பேச்சுத் திறமையைப் பரீக்ஷை செய்கிறார்கள்.

## 4 வயது

தேகத்தின் உறுப்புகளைக் காட்டுதல். தெரிந்த வஸ்துக்களின் பெயரைச்சொல்லுதல் படத்தில் காட்டியுள்ள சாமான்கள் இன்னதென்று சொல்லுதல். தகப்பனார் பெயரைச் சொல்லுதல். சொல்லப்பட்ட சில வார்த்தைகளையும், எண்களையும் சொன்ன பிரகாரம் சொல்லுதல்.

# செய்தித் திரட்டு

## (1) திருச்செந்தூர் தாலுகா ஆரம்ப பாடசாலை மானேஜர் சங்கம்.

5-6-41-ல் சாத்தங்குளத்தில் கூடியது.

தீர்மானங்கள் :—

1. சந்தா செலுத்தாத அங்கத்தினரை நேரில் சந்தித்து சந்தாவை வசூலிக்க காரியதரிசிக்கு அனுமதி யளித்தது.

2. போர்டு பாடசாலைகளைப்போல் உதவிபெறும் தனி முஸ்லீம் பாடசாலைகளில் மதக்கல்வி ஆசிரியருக்கு உதவித்தொகை அளிக்க வேண்டும்.

3. பள்ளிக்கூடத்தின் கிராண்டு தொகையைக் குறைக்கும் காரணத்தை அவ்வப்போது மானேஜர்களுக்குத் அறிவித்தால் அக்குறைகளை நீக்க ஏதுவாகும்.

4. தாலுகா அட்வைசரி கமிட்டியில் மானேஜர்களுக்கு இரண்டு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கவேண்டும்.

---

## (2) பஞ்சாயத்து போர்டு ஸ்கூல், பழமாந்தேரி.

25-4-41-ல் பெற்றோர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. S. கலியாண சுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாணவ மாணவிகள் தங்கள் திறமைகளைக் காட்டினர். பெண்கள் பக்த குசேலா நாடகத்தை நடித்துக் காட்டினர். தலைவர் ஆரம்பக் கல்வியின் அவசியம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

பிற்பகலில் மாணவ மாணவி சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா நடைபெற்றது. மாணவ மாணவிகள் 'பக்த ராமதாஸ்' சரித்திரத்தை நடித்துக் காட்டினர். தலைவர் முடிவுரையில் மாணவ மாணவி சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும், சங்க சார்பில், பாலர்கல்வி கலைமகள் முதலிய பத்திரிகைகளை வரவழைத்து ஒழிந்த நேரங்களில் அவைகளைப் படித்து அறிவை விருந்திசெய்து கொள்வது நலம் என்றும் கூறினார்.

3-6-41-ல் பெற்றோர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு ஆரம்பவிழா நடைபெற்றது. செங்கற்பட்டு ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ P. N. ராமஸ்வாமி அய்யர், I.C.S., தலைமை வகித்தார். மாணவ மாணவிகள் ஆடல் பாடல்களில் தங்கள் முழுத்திறமையையும் காட்டினார்கள். 'கிருஷ்ண அர்ஜுன' என்னும் சரித்திரத்தை நடித்துக்காட்டினர். டிப்டி இன்ஸ்பெக்டர்

ஸ்ரீ T. S. கலியாண சுந்தரம் 'ஆரம்பக் கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

---

### (3) திண்டுக்கல் தாலுகா போர்டு ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருமலை ராயபுரம்.

15-6-41ந்தேதி ஸ்ரீ G. வேதமுத்து அவர்கள் தலைமையில் நிர்வாகக்கமிட்டி கூடி மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றியது.

1. திருத்தி அமைத்த சம்பள திட்டத்தின்படிக்கும் G. O. 145 dated 27-1-40, G. O. 190 dated 6-2-41. படிக்கும் இழந்த சம்பளங்களை திருப்பி யளிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

2. மெடிகல் ரஜாவை அரைச்சம்பளத்திற்கும் பதிலாக முழுச் சம்பளத்துடன் உத்தரவளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

3. Table copies சப்ளை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

---

### (4) பெரம்பலூர் தாலுகா, பழய விராலிபட்டி ஹிந்து எய்டெட் எலிமெண்டரி பாடசாலை.

13-6-41ந்தேதி பெற்றோர் சங்க முதல் ஆண்டு விழா நடைபெற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ G. ராமகிருஷ்ணய்யர் தலைமை வகித்தார்.

தலைவர் முகவுரையில் பாடசாலையில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டிய விதத்தைப்பற்றியும், பாடசாலையை கோயில்களைப்போல் அவசியமாக எண்ணி ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் ஒத்துழைத்து மேலான நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கூறினர். மாணவ மாணவிகளால் பாட்டும் நடிப்பும் நடைபெற்றது.

---

### (5) 26-4-41ல் சைதாப்பேட்டையில் நடந்த செங்கல்பட்டு ஜில்லா போர்டு ஆசிரியர்கள் மகாநாடு.

வரவு செலவு விவரம். (26-2-41 to 19-5-41.)

| வரவு :— | ரூ. அ. பை. |
|---|---|
| ஆசிரியர்களாலும், ஆசிரிய சங்கங்களாலும் நன்கொடை.... | 31—12—0 |
| ஸ்ரீபெரும்புத்தூர் தாலுகா யூனியன் நிதியிலிருந்து எடுத்துக் கொண்ட தொகை.... | 17—11—8 |
| | 49— 7—8 |

செலவு :—தபால் செலவு, அச்சுக்கூலி, பிரயாணச் செலவு முதலியன.... ரூ. 49—7—8.

# EXTRACTS FROM FORT ST. GEORGE GAZETTE.
## (PART I-B.)

### Amendment to the Madras Educational Rules.

(*G.O. Ms. No. 633, Education, dated 24th April, 1941.*)

No. 101.

In Rule 92 (*b*), for the third sentence the following sentence shall be substituted :—

"The certificate shall be issued by a gazetted officer, an Inspector of Police or a non-gazetted officer of the Revenue department not lower in rank than a Deputy Tahsildar or Sub-Magistrate."

(Gazette, dated 6—5—41.)

### Amendment to Rule 54 (ii) of the Grant-in-Aid Code.

(*G.O. Ms. No. 811, Education, dated 28th May, 1941.*)

No. 121.

For the existing sub-paragraphs of Rule 54 (*ii*) of the Grant-in-Aid Code substitute the following :—

"The Government Solicitor will be permitted to charge for the examination of titles and settlement of mortgages in connexion with building schemes for educational institutions placed on the approved list by the Director fees not exceeding one-half per cent. of the estimated cost of the scheme approved by the Director, subject to a minimum of Rs. 20 and a maximum of Rs. 250 in each case.

The fees so charged shall be paid by the Management of the institution concerned whether a grant is paid by Government or not.

One-half of the Government Solicitor's fees and registration fees incurred in connexion with the execution of the deed of agreement will be re-imbursed to the management in the shape of a supplementary grant from provincial funds. If a building grant is not sanctioned by the Government, the question of re-imbursing the management for one-half of the expenditure incurred on Government Solicitor's fees will be considered on the merits of each case." (Gazette, dated 3—6—41).

### Amendment to the Rules relating to the Provident Fund for Teachers in Non-pensionable Service.

(*G.O.Ms. No. 918, Education, dated 13th June, 1941.*)

No. 131.

The following amendment to the rules relating to the Provident Fund for teachers in non-pensionable service is published :—

#### Amendment.

After Rule 9 (*a*), add the following note :—

NOTE.—"Subscribers are also permitted, as a temporary measure, to utilise the amounts at their credit in the Post Office Savings Bank Account, in purchasing Defence Saving Certificates following the procedure laid down in Rule 9 (*a*)." (Gazette, dated 24—6—41.)

### Amendment to Rule relating to Appointment of Teachers in Schools maintained by Local Bodies.

(*G.O. No. 994, Education, dated 27th June, 1941.*)

No. 145.

In sub-Rule 3 of Rule 1 of the said rules, for the words 'the Deputy Inspector or the Sub-Assistant Inspectress' the words 'the District Educational Officer or the Inspectress of Schools' shall be substituted. (Gazette, dated 8—7—41.)

# பத்திராதிபர் குறிப்புகள்

**ஆரம்பப் பள்ளிக்கூடப் பாடதிட்டமும், கலையும், கைத்தொழிலும்**

இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் பாடதிட்டங்கள் புதிதாக வெளியிடப்பட்டன. இப்பாடதிட்டங்கள், வர்தாகல்வித் திட்டத்தை அனுசரித்ததாயிருக்க வேண்டுமென்றதாகக் கலையும், கைத்தொழிலும் பாடங்களாக அமைக்கப்பட்டன. ஆனால் இப்பாடதிட்டத்தைச் சரிவரப்போதிக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்று சிந்திக்குங்கால், இத்திட்டம் அமுலுக்கு வந்து இரண்டு வருஷங்களான போதிலும் பல பள்ளிக்கூடங்களில் இப்பாடங்கள் கால அட்டவணையில் தோன்றுவதேயல்லாமல், சரிவரப்போதிக்கப்படவில்லையென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. இக்கலைகளிலும் கைத்தொழில்களிலும் போதனு சக்திவாய்ந்த ஆசிரியர்கள் மிகக் குறைவே. கிராமத்தில் இவைகளில் தேர்ச்சியடைந்த தொழிலாளர்களைக்கொண்டு இப்பாடங்களைப் போதிக்க ஏற்பாடுசெய்வது பயனளிக்கும் என்று கருதுவதற்கு இல்லை. ஆகவே, இப்பாடங்களைக் கட்டாயப்பாடமாக சேர்ப்பதினுல் பயன் ஏற்படவேண்டுமானுல், இவைகளை சரிவரப்போதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை காலதாமதமின்றிச் செய்யவேண்டும். புதிதாகத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் நியமிப்பது இப்பொழுது சாத்தியமாகாது. ஆனுல் தற்போதுள்ள ஆசிரியர்களுக்கு இப்பாடங்களைப் போதிப்பதற்குவேண்டிய பயிற்சிகொடுப்பது அவசியமாகும். சென்ற மேமீ சென்னையில்ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பாடங்களில், பயிற்சி அளிக்க ஒரு 'கோடைக்காலப் பள்ளிக்கூடம்' நடத்தினுர்கள். கல்வி அதிகாரிகளின் ஆதரவுடன்தான் இது நடத்தப்பட்டது. இதில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிக்க ஊக்கம் காட்டியதாகத் தெரியவருகிறது. இம்மாதிரி பல (கோடைகாலப் பள்ளிகள்) ஆங்காங்கு ஏற்படுத்தி, ஆரம்ப ஆசிரியர்கள் எல்லோருக்கும் இப்பயிற்சி அளிப்பது அவசியம்.

இதில் நமது கல்வி அதிகாரிகள் சற்று கவனம் செலுத்துவார்களானல், கலையும் கைத்தொழிலும், பேருக்கு மாத்திரம் பாடங்களாக இல்லாமல் மிகவும் உபயோகமான பாடங்களாகும். 'கோடைக்காலப் பள்ளிக் கூடங்களில்' சிலவற்றையாவது நடத்தும் பொறுப்பை அதிகாரிகளே ஏற்றுக்கொள்ளவேண்டும். சில இடங்களில், கல்வி அதிகாரிகள் Refresher Course கள் நடத்தி வருகிருர்கள். இவை நடத்தவேண்டிய செலவு பூராவும் ஆசிரியர்களே பார்த்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இதனுல் ஆசிரியர்கள் படும் கஷ்டம் சொல்ல முடியாது. கலையும் கைத்தொழிலும் புதிய பாடங்கள். இவைகளில் பயிற்சி அடைவதற்காவது அதிகாரிகள் தக்க வசதிகள் அளிக்க வேண்டும்.

தவிர, பள்ளிக்கூடங்களில், இப்பாடங்கள் சரிவரப் போதிக்கப்பட வேண்டுமானல், போதுமான உப கரணங்கள் வேண்டி யிருக்கும். இவைகளைப் பெற, தாராளமாக உதவி யளிப்பது மிகவும் முக்கியம். இம்மாதிரி உதவி யளிப்பதற்காக உதவி விதிகளைத் திருத்தி யமைத்தல் அவசியம்.